# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.850/F/2024 (SA.16260/F/2021)

திரு அ. அன்வர் பாட்சா — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
சீர்காழி ஊராட்சி ஒன்றியம்,
மயிலாடுதுறை மாவட்டம் - 609 110. — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 21.08.2021 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 21.10.2021 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 31.08.2021 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 06.10.2021 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.12.2021 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 11.10.2023 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 28.11.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு அ. அன்வர் பாட்சா என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றிய ஊராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், புங்கனூர் ஊராட்சியில் எத்தனை வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன இதற்குரிய வைப்புத்தொகை எந்த வங்கியில் எவ்வளவு உள்ளது என்பது பற்றிய விவரம், மாநில அரசு நிதியிலிருந்து புங்கனூர் ஊராட்சியில் என்னென்ன வளர்ச்சிப் பணிகள் இதுவரையில் நடைபெற்றுள்ளன என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.16260/F/2021) 11.10.2023 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***" 4. அன்றைய (11.10.2023) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பத்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவலை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் ஆகியவற்றினை*** **இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு** ***உத்தரவிடப்பட்டிருந்தது".***

4. இந்நிலையில், இவ்வாணையத்தால் 11.10.2023 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் மதிக்கவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை நாளதுவரையில் தனக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 28.11.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (16.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

***6. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-***

- ***மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை***

*அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- **மேலும், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு நாளதுவரையில் தகவல்கள் வழங்காத காரணத்தினால் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) / தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.**

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.850/F/2024 (SA.16260/F/2021)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
சீர்காழி ஊராட்சி ஒன்றியம்,
மயிலாடுதுறை மாவட்டம் - 609 110.

**<u>வழக்கு எண்.NC.850/F/2024 (SA.16260/F/2021)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு அ. அன்வர் பாட்சா,
எண்.3/128, வடக்குத்தெரு,
புங்கனூர் - 609 117, சீர்காழி ஒன்றியம்,
மயிலாடுதுறை மாவட்டம்.

Copy to: File.
SNPS / 22.04.2025